செ.வெ.எண்: 19/ 2021 நாள்: 08.07.2021

## திருப்பூர் மாவட்டம்

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.07.2021) பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவிக்கையில்,

திருப்பூர் மாவட்டத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை ரூ.125.745 கோடி மதிப்பீட்டில் சுமார் 346105 சதுர அடி பரப்பளவில் 4 கட்டிடங்களுடன் கூடிய மருத்துவமனை கட்டிடமும், ரூ.107.215 கோடி மதிப்பீட்டில் சுமார் 332520 சதுர அடி பரப்பளவில் 2 கட்டிடங்களுடன் கூடிய கல்வி இயல் கூடம் மற்றும் ரூ.104.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 290305 சதுர அடி பரப்பளவில் 15 கட்டிடங்களுடன் கூடிய குடியிருப்பு கட்டிடமும் என ரூ.336.96 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவக்கல்லூரி அமையவுள்ளது. இக்கட்டிடத்தில், மன்ற கட்டிடம், (Auditorium) மருத்துவ ஆசிரியர் குடியிருப்பு, பணியாளர் குடியிருப்பு, உள்ளிருப்பு மருத்துவர் குடியிருப்பு, நிர்வாக அலுவலக கட்டிடம், கல்லூரி முதல்வர் குடியிருப்பு, சமையல் கூடம், சிற்றுண்டியகம், விளையாட்டு மைதானம், நவீன உடற்பயிற்சி கூடம், கலையரங்கம், மாணவர் விடுதி, மாணவியர் விடுதி, செவிலியர் விடுதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், 4 மற்றும் 2 சக்கர வாகனம் நிறுத்தும் கூடம், மின்தூக்கி மற்றும் சூரிய ஒளி மின்சார வசதி மற்றும் மழைநீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிளுடன் சிறப்பான முறையில் அமையவுள்ளது. எற்கனவே இங்கே செயல்பட்டு கொண்டிருந்த அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கட்டப்பட்டு வரும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையும் சேர்ந்து ஏறத்தாழ 27 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இதில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மட்டும் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டிடத்தின் கட்டுமானப்பணிகள் விரைவாக பணிகளை நிறைவு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவிலே திறந்து வைக்கப்படும். ஏற்கனவே, கொரோனா நோய் தொற்றினால் பொது மக்கள் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் தற்பொழுது படிப்படியாக நோயின் தாக்கம் குறைந்து கொண்டே வருகிற சூழ்நிலையில் இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இந்த வட்டாரத்தில் ஏழை, எளிய நடுத்தர மற்றும் வசதி படைத்தவர்கள் கூட தனியார் மருத்துவமனைக்கு நிகராக உயர்தர சிகிச்சை பெறக்கூடிய வகையில் விரைவாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர்திரு.ஜெகநாதன், பொதுப்பணிததுறை (மருத்துவ கட்டிடங்கள்) திரு.தவமணி, உதவி செயற்பொறியாளர் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**